(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 448.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2015 ஏப்பிறல் 09, வியாழக்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4836/ '14

1\.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள “கோப் சிட்டி” வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை தேர்தல் தொகுதிவாரியாக தனித்தனியாக எவ்வளவு;

(ii) இதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(iii) கோப் சிட்டி வர்த்தக நிலையங்களிலிருந்து கொள்வனவு செய்யப்படுகின்ற பண்டங்களுக்காக வாடிக்கையாளர்களுக்கு விலைச்சிட்டைகள் வழங்கப்படுகின்றனவா;

(iv) ஆமெனில், வழங்கப்படுகின்ற குறித்த விலைச்சிட்டைகளில் கொள்வனவு செய்யப்பட்ட ஒவ்வொரு பண்டத்தின் பெயரும் விலையும் குறிப்பிடப்படுகின்றதா;

(v) ஒவ்வொரு கோப் சிட்டி வர்த்தக நிலையத்திலிருந்தும் தெளிவான விலைச்சிட்டைகள் வழங்கப்படுவதில்லை என்பதை அறிவாரா;

(vi) கோப் சிட்டி வர்த்தக நிலையங்களில் சிலவற்றினால் விலைச்சிட்டைகள் வழங்கப்படாமைக்கும் மேலும் சிலவற்றினால் விலைச்சிட்டைகள் வழங்கப்படுவதற்குமான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4992/ '14

2\.

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள குமாரதுங்க முணிதாச அவர்கள் பிறந்த பூமியாகிய இந்திகஸ்ஆரே திக்ஹேன எனப்படும் காணி அப்போதைய கலாசார, கலை அலுவல்கள் அமைச்சினால் சுவீகரிக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) குறித்த அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தவர்கள் யாவர் என்பதையும்;

(iv) மேற்படி திட்டம் ஏதேனுமொரு நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருப்பின், அந்த நிறுவனம் யாதென்பதையும்;

(v) இதற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட திட்டம் புதிய திட்டம் தயாரிக்கப்படும் போது பயன்படுத்தப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5118/ '14

3\.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குக்குலேகங்க மின் உற்பத்தி நிலையத்திலுள்ள மின் பிறப்பாக்கிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு இயந்திரத்தினதும் மின் உற்பத்தி ஆற்றல் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2013 ஆம் ஆண்டு பூராகவும் மேற்படி அனைத்து மின் பிறப்பாக்கிகளும் இயங்கியதா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி மின் பிறப்பாக்கிகளில் செயலிழந்திருந்த இயந்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு இயந்திரமும் செயலிழந்திருந்த காலம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

(iv) மேற்படி மின் பிறப்பாக்கிகள் செயலிழப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) எதிர்காலத்தில் மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் இயந்திரங்கள் செயலிழக்காதிருப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5500/ '14

4\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபையின் ஊழியரொருவருக்கு குறைந்த பட்சம் ரூபா 96,000 தொகை மற்றும் அதிகபட்சம் ரூபா 265,000 தொகை என்ற ரீதியில் இழப்பீட்டுத் தொகையை செலுத்தி 1990.03.31 ஆம் திகதியிலிருந்து மேற்படி நிறுவனம் மூடப்படுமென அப்போதைய அரசாங்கத்தின் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரினால் 1990.03.23 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டதென்பதையும்;

(ii) அவ்வாறு அறிவிக்கப்பட்ட போதிலும் மேற்படி ஊழியர்களுக்கு ரூபா 50,000 மாத்திரமே செலுத்தப்பட்டதென்பதையும்;

(iii) மேற்படி நிலைமையின் கீழ் இவர்கள் பெரும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளார்களென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபையில் சேவையாற்றிய மேலே குறிப்பிட்ட ஊழியர்களுக்கு எஞ்சிய இழப்பீட்டுத் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அப்போதைய ஆற்றுப்பள்ளத்தாக்குச் சபைக்கு சொந்தமாக இருந்த உத்தியோகபூர்வ இல்லங்களின் உரிமை, அச் சந்தர்ப்பத்தில் அங்கு குடியிருந்த ஊழியர்களுக்கு வழங்கப்படுமென்றும், வீடுகள் இல்லாத ஏனைய ஊழியர்களுக்கு காணிகள் பெற்றுக்கொடுக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்ட கூற்றின் பிரகாரம், இன்றளவில் சகல ஊழியர்களுக்கும் வீடுகள் அல்லது காணிகள் வழங்கி முடிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வீடுகள் அல்லது காணிகளுக்கு இன்றளவில் உறுதிப் பத்திரங்கள் வழங்கி முடிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5847/ '14

5.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— முஸ்லிம் சமய அலுவல்கள் மற்றும் தபால் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் இலங்கை வக்பு சபையில் R/0682/T/036 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஜும்ஆ பள்ளிவாசலின் அசைவற்ற ஆதனங்களை (காணி, வீடுகள், கடைகள்) கையாளுகையில் ஏற்பட்டதாகக் கூறப்படும் ஊழல் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் ஒரு விசாரணை நடத்துவாரா என்பதையும்;

(ii) இந்தப் பள்ளிவாசலுக்குரிய ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானம் மற்றும் செலவு மீதி தொடர்பாக விசேட புதிய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையொன்றின் கீழ் கணக்காய்வை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட வக்பு ஆதனங்கள் கையாளப்படுகையில் மோசடியாக தனிநபர்களின் பெயரில் உறுதிகள் தயாரிக்கப்பட்டு கையுதிர்க்கப்பட்ட ஆதனங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய ஆதனங்களை தடைசெய்வதற்கும் சம்பந்தப்பட்ட ஆட்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும்படியும் ஆலோசனை வழங்குவாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

5898/ '15

6.

கௌரவ கீதாஞ்ஜன குணவர்தன,— சுற்றுலா, விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அவிசாவளை தேர்தல் தொகுதியின், சீத்தாவகபுர நகர சபை ஆளுகைப் பிரதேசத்தில், பிலிப் குணவர்தன விளையாட்டுக் கட்டிடத் தொகுதியின் இரண்டாம் கட்டமான விளையாட்டு மண்டபத்தை நிர்மாணித்தல் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி விளையாட்டு மண்டபத்தை மக்களுக்கு கையளிக்கவுள்ள திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியின் இரண்டாம் கட்டத்தை மக்களுக்கு கையளித்ததன் பின்னர் அதன் அபிவிருத்தி மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான சீத்தாவகபுர நகர சபையின் கோரிக்கைக்கு அமைவாக இவ்விளையாட்டுக் கட்டிடத் தொகுதியை மேற்படி நகர சபையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5914/ '15

7.

கௌரவ சுசந்த புஞ்சி நிலமே,— மக்கள் ஒழுங்கு மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015.01.23 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த தினமொன்றின் இரவு மொரவெவ, மஹதிவுல்வெவ II ஆம் கட்டத்தில் அமைந்துள்ள ஶ்ரீ இந்திராராம மஹா விகாரை பொலிஸாரால் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விகாரையில் வசிக்கும் பீடத்தின் நிறைவேற்றுச் சபை அங்கத்தவரும் கௌரவ சங்க சபை அங்கத்தவருமாகிய வண. பொல் ஹேன்கொட உபரதன நாயக்க தேரரின் பாதுகாவலர்களது வீடுகள் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(ii) மேற்படி பரிசோதனைகளுக்கு அனுமதியளித்தவர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி பரிசோதனையில் பங்கேற்ற உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) நல்லாட்சிக் கொள்கையின் அடிப்படையில் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பொலீசார் அல்லது வேறு பாதுகாப்புப் பிரிவுகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களால் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த விகாரைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதன் நோக்கம் யாதென்பதையும்;

(iv) மேற்படி நோக்கம் நிறைவேறியுள்ளதா என்பதையும்;

(v) பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்ட விகாரைகளில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட விகாரைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(vi) அவை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

4837/ '14

8.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண சபையினால் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகள் மாவட்ட அடிப்படையில் எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ள மருத்துவர்கள், தாதிமார்கள், வைத்தியசாலைத் தொழிலாளிகள் மற்றும் ஏனைய பணியாட்தொகுதியினரின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இவ்வைத்தியசாலைகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாட்தொகுதியிலுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4993/ '14

9.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில், தெனியாய வலயக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற மாறை/மொரவக்க பௌத்த மகா வித்தியாலயம் 5,000 ஆரம்பப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பாடசாலையாகும் என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூபா 625,471.43 ஆகுமென்பதையும்;

(iii) இதன் பொருட்டான மக்களின் பங்களிப்பு ரூபா 135,471.43 ஆகுமென்பதையும்;

(iv) தற்போது இக்கருத்திட்டத்தின் பொருட்டு பிட்டபெத்தர பிரதேச செயலகத்தினால் ரூபா 490,000 தொகை செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மாறை/மொரவக்க பௌத்த மகா வித்தியாலயத்தின் அதிபர் மேற்படி கருத்திட்டத்திற்கு ரூபா 7 இலட்சம் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்து ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் ரூபா 1000/= தொகையொன்றை அறிவிட்டுள்ளார் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறு பணம் சேகரிப்பதற்கு அதிபருக்கு அதிகாரம் உள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி பணம் சேகரிக்கப்படுதல் தொடர்பாக ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறு பணம் சேகரிப்பதற்கு அதிகாரம் இல்லையெனில், அது தொடர்பாக முறைசார்ந்த விசாரணையொன்றை நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4838/ '14

10.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரை வடமேல் மாகாண சபையின் கீழ் நிர்வகிக்கப்பட்ட பாடசாலைகளில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற அழகியற் கலை ஆசிரியர்களின் எண்ணிக்கை சங்கீதம், நடனம், ஓவியம், நாடகம் மற்றும் அரங்கியற் கலை ஆகிய பாடங்களின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காலகட்டத்தில் குறிப்பிட்ட பாடங்களுக்கு புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட அழகியற்கலை ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) 2014 ஆம் ஆண்டில் ஓய்வுபெற உத்தேசித்திருந்த வடமேல் மாகாண சபைப் பாடசாலைகளில் பணிபுரிந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க பாடசாலையொன்றை மூடுகின்ற சட்ட ரீதியான முறையியல் யாதென்பதையும்;

(ii) மேற்படி முறையியலுக்கு புறம்பாக செயற்படுகின்ற ஒருவருக்குப் பெற்றுக்கொடுக்கக்கூடிய தண்டனைகள் அல்லது எதிராக மேற்கொள்ளக் கூடிய வேறு நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2014 சனவரி மாதத்தில் தென் மாகாண சபையைக் கலைப்பதற்கு முன்னர் காலி மாவட்டத்தில், அம்பலாங்கொடை தம்மகுசல வித்தியாலயத்தை மூடுவதற்கு அப்போதிருந்த மாகாண கல்வி அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வித்தியாலயத்தை மூடிவிடுதல் சம்பந்தமாக அதிகாரிகளால் முன்வைக்கப்பட்டிருந்த காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி வித்தியாலயத்தை மூடிவிடுகின்ற செயன்முறை சட்டரீதியாக இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஒரு பாடசாலையை மூடிவிடுவதைவிட அதனைப் பாதுகாத்துக்கொள்வது மிக முக்கியமென்பதால் அம்பலாங்கொடை தம்மகுசல வித்தியாலயத்தை தொடர்ந்தும் பேணிவருவதற்குத் தேவையான வளங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தது ஏன் என்பதையும்;

(ii) மேற்படி வித்தியாலயத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 3 முதல் 13 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்"

3.

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

2.

சம்பிக பிரேமதாச சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.1),— 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதி தீர்வைகள் தொடர்பான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2015 சனவரி 29 ஆந் திகதிய 1899/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.2),— 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதி தீர்வைகள் தொடர்பான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2015 பெப்புருவரி 26ஆந் திகதிய 1903/40ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2014 திசெம்பர் 02 ஆந் திகதிய 1891/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2014 திசெம்பர் 12 ஆந் திகதிய 1892/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2014 திசெம்பர் 31 ஆந் திகதிய 1895/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 சனவரி 22 ஆந் திகதிய 1898/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 சனவரி 29 ஆந் திகதிய 1899/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 6),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 பெப்புருவரி 14 ஆந் திகதிய 1901/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.7),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 பெப்புருவரி 24 ஆந் திகதிய 1903/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.8),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 மாச்சு 17 ஆந் திகதிய 1906/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

நிதி அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 16.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.12.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

மின்வலு, எரிசக்தி அமைச்சர்.— இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் கீழ் மின்வலு, சக்தி அமைச்சரால் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் பேரில் மின்சார (அனுமதிப்பத்திரம் தொடர்பில் விண்ணப்பித்தலும் விலக்களிப்பும்) தொடர்பில் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 10 ஆம் திகதிய, 1883/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 20.

சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 21.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 22.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

24.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

25.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

26.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

27.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

28.

இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.